*1*

# நித்தியத்திற்கான பரீட்சை

## (யோபு 1–3)

*யோபு புத்தகத்தின் காட்சியமைவு ஊத்ஸ் என்ற நாட்டில் நடைபெற்றதாக உள்ளது. ஊத்ஸ் என்ற நாடு, பலஸ்தீனம் மற்றும் அரபு நாடுகளுக்கிடையில் எல்லையின் மீது இருந்ததாக நம்பப்படுகிறது. கலிலேயாக் கடலின் கிழக்கில் உள்ள வளமான பகுதியான ஆரான் [Hauran]என்ற இடத்தில் யோபுவின் வீடு இருந்ததாகப் பாரம்பரிய வரலாறு குறிப்பிடுகிறது.*

*இந்தப் புத்தகத்தை எழுதியது யார் என்று நாம் அறிவதில்லை, ஆனால் (இதைப் பற்றிய) பழங்கால கோட்பாடுகள் சிலவற்றை இங்கு குறிப்பிடுவது தகுதியாக இருக்கும். சிலர், இந்தப் புத்தகத்தை மோசே எழுதினார் என்ற கோட்பாட்டை ஆதரிக்கின்றனர். செப்துவஜிந்த் வேதாகமம், ஒரு அடிக்குறிப்பில், பாரம்பரிய வரலாற்றில் இருந்து மேற்கோள் காண்பித்து இந்த யோபுவை, ஆதி. 36:33ல் பட்டியல் இடப்பட்டுள்ள ஏதோம் நாட்டின் இரண்டாவது அரசரான யோபாப் என்பவர் என்று அடையாளப் படுத்துகிறது. இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள காட்சியமைவும் தரப்பட்டுள்ள பெயர்களும் ஏதோமியருடைய தொடக்க காலம் மற்றும் அதன் காட்சியமைவு ஆகியவற்றுடன் இணைவு கொண்டுள்ளன. இது சரியாக இருந்தது என்றால், யோபு இஸ்ரவேலர்கள் எகிப்தில் இருந்த தொடக்க நாட்களில் இருந்திருப்பாரென்று அர்த்தமாகிறது. யோசேப்பு தமது தந்தையையும் அவரது குடும்பத்தவரையும் அழைப்பிக்கக் காரணமாயிருந்த பஞ்சத்திற்குப் பின்பு, இஸ்ரவேல் எகிப்தில் ஒரு பெரிய மக்களினமாக வளரத் தொடங்கிற்று. பலஸ்தீனத்தின் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில், ஏதோமியரும் ஒரு மக்களினமாக வளரத் தொடங்கினர்.*

*யூதப்பாரம்பரியமானது மோசே மீதியான் தேசத்தில் இருக்கையில் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்று குறிப்பிடுகிறது. இதுவும் கூட மேற்கூறிய பாரம்பரிய வரலாற்றிற்கு நேர்மாறாக இராமல் சாத்தியமானதாகவே உள்ளது. மோசே யோபுவின் உடனடி பின் சந்ததியாரிடத்தில் இருந்து இந்த வரலாற்றைக் கற்றிருக்கலாம். மீதியான் நாடு ஏதோமின் எல்லையில் இருந்தது, மற்றும் இவ்விரு பகுதிகளிலும் இருந்த மக்கள் ஒருவருக்கொருவர் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர்.*

*யோபு என்பவர், வேதாகம சத்தியத்தை விவரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கற்பனைக் கதாபாத்திரம் அல்ல, ஆனால் அவர் ஒரு உண்மையான நபராக இருந்தார் என்று, வேதாகமத்தின் புத்தகங்களை*

*எழுதிய மற்ற எழுத்தாளர்களால் உணர்ந்தறியப்பட்டுள்ளது (எசே. 14:14, 20; யாக். 5:11).*

## *யோபுவின் நல்ல வாழ்வு (1:1-5, 8)*

*வெகுசில மனிதர்களே யோபுவைப் போல் ஆசீர்வதிக்கப்பட்டிருந் தனர். 1:1-5ல் அவருக்குக் கிடைத்திருந்த மாபெரும் ஆசீர்வாதங்களில் பல பட்டியலிடப்பட்டுள்ளன:*

> *ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் இருந்தான். அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான். அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள். அவனுக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். அதினால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான். அவன் குமாரர், அவனவன் தன் தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்து செய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள். விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப் பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப் படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின் படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான். இந்தப் பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான்.*

*யோபு, தேவனுக்குப் பயந்தவராக, நன்மையை விரும்பி பொல்லாப்புக்கு விலகுகிற சன்மார்க்கராக இருந்தார். அவர் பாவம் எதுவும் செய்யவில்லை என்ற கருத்தில் அல்ல ஆனால் தேவனுக்கு உண்மை உள்ளவராக இருந்தார் என்ற கருத்திலேயே குற்றமற்றவராக இருந்தார் (1:1, 8). அவர் தேவனைப் பற்றிய தமது தியானத்திலும் ஆராதனையிலும் தொடர்ந்து நிலைத்திருந்தார் (1:5).*

*யோபுவின் ஆசீர்வாதங்களில் அவருக்கு இருந்த நல்ல குடும்பமும் அடங்கிற்று. அவருக்கு ஏழு மகன்களும் மூன்று மகள்களுமாகப் பத்துப் பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் ஒரு நெருக்கமான குடும்பமாக இருந்தனர். அவருடைய மகன்கள் "அவரவர் நாளிலே" - அனேகமாக இது அவரவர் பிறந்த நாளாக இருக்கலாம் - விருந்து ஒன்றைத் தயாரித்து வைபவத்தில் கலந்து கொள்ளும்படித் தங்கள் சகோதரிகளையும் அழைப்பது வழக்கமாய் இருந்தது. அவர்கள் குடும்பமாக ஒன்று கூடியிருத்தலை மகிழ்வுடன் அனுபவித்தனர். ஒரு தந்தைக்குத் தமது குடும்பத்தின் அன்பு மற்றும் அருகாமையை விட மாபெரும் ஆசீர்வாதம் வேறெதுவும் இருப்பதில்லை.*

*யோபு உலகப்பிரகாரமாக மாபெரும் செல்வம் கொண்டிருந்தார். அந்த நாட்களில், செல்வம் என்பது கிடைகள் மற்றும் மந்தைகள் ஆகியவற்றைக் கொண்டு அளவிடப்பட்டது. அவர் 7,000 ஆடுகள், 3,000 ஒட்டகங்கள், 500 ஏர் மாடுகள், 500 பெண் கழுதைகள் மற்றும் திரளான வீட்டு வேலைக் காரர்களைக் கொண்டிருந்தார். அவர் நாட்டின் அந்தப் பகுதியில் மிகச் செல்வந்தரான மனிதராயிருந்தார்.*

*நல்ல உடல் நலம் இல்லையென்றால், பூமிக்குரிய மற்ற ஆசீர்வாதங்கள் அர்த்தமற்றவைகளாய் இருக்கும், யோபு நல்ல உடல் நலத்தை மகிழ்வுடன் அனுபவித்தார். நல்ல உடல் நலம் இல்லையென்றால் செல்வத்தின் மதிப்பு குறைந்து விடுகிறது. உடல் நலம் இழப்பு என்பது, நமது செல்வத்தைக் களவு செய்துவிடுகிறது அல்லது செல்வத்தை அனுபவித்தலை இயலாததாக்கி விடுகிறது.*

*யோபுவின் நண்பர்கள் அவரை மதித்தனர். இதுவும் கூட ஒரு சீராட்டப் பட்ட ஆசீர்வாதமாகவே இருக்கிறது. உண்மையில் சிலர் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுதல் என்பதைக் காட்டிலும் நண்பர்களால் ஏற்றுக் கொள்ளப்படுதல் என்பதை அதிகமாக மதிக்கின்றனர். யோபு தமது நண்பர்களின் அங்கீகாரத்தைக் காட்டிலும் தேவனுடைய அங்கீகாரத்தை அதிகமாய்ப் பேணியிருப்பினும், அவர்கள் தம்மை மதித்ததை அவர் பாராட்டியிருக்க வேண்டும். நம் யாவருக்குமே நமது நண்பர்களின் ஏற்றுக்கொள்ளுதலை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பது அவசியமாக உள்ளது.*

*எல்லா ஆசீர்வாதங்களுக்கும் மேலாக, யோபு தேவனுடைய அங்கீ காரத்தை மகிழ்வுடன் அனுபவித்தார்: "... உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை" (1:8). நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளோம் என்று அறிவதைக் காட்டிலும் மேலான ஆசீர்வாதம் வேறு எதுவும் இருப்பதில்லை. எந்த மனிதருக்கும் எந்தக் காலத்திலும் தரப்பட்டுள்ளவற்றிலேயே மாபெரும் பாராட்டு ஒன்றை யோபுவுக்குத் தேவன் கொடுத்திருந்தார். தேவன் நம்மைப்பற்றி அப்படிப்பட்ட நல்ல விஷயங்களைக் கூறும்படியான வாழ்வை வாழுதல் என்பதைக் காட்டிலும் பெரிய இலக்கு வேறு ஏதாவது இருக்கிறதா?*

## *யோபுவுக்குப் பரீட்சை (1:6-2:10)*

*சாத்தான் பூமியில் வாழ்ந்து கொண்டும் நன்றாகவும் இருந்தான் மற்றும் இருக்கின்றான். தேவனுடைய புத்திரர்கள் கர்த்தருக்கு முன்பாக ஒன்றுகூடும் நாள் வந்தபோது, சாத்தானும் அங்கே இருந்தான். இவ்விஷயத்தில் தேவனுடைய புத்திரர்கள் என்பவர்கள் தூதர்கள் என்றே வழக்கமாக நினைக்கப்படுகின்றனர். சாத்தானுடைய வல்லமை பற்றி இவ்விடத்தில் ஆழ்ந்தறிவுள்ள ஒரு பாடம் உதிக்கிறது. அவன் பரலோகத்தில் தேவனுடைய புத்திரர்கள் கூடும் கூட்டத்தில்இருக்க முடியும் என்றால், இங்கு பூமியில் தேவனுடைய மக்கள் கூடுகின்ற சபைக்குழுமங்களில், அவன்*

தனது வழியின்படிக் கிரியை செய்ய உட்புகுதலைக் காண்பதில் நாம் வியப்படைய அவசியம் இல்லை. அவன், "பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து" கொண்டிருந்தான் (1:7) என்பதைக் கவனியுங்கள்.

தேவனும் சாத்தானும் அந்தப் பரலோகக் கூட்டம் பற்றியல்ல ஆனால் பூமியில் இருந்த ஒருவரைப் பற்றியே பேசினார்கள். ஆதாம் ஏவாள் தொடங்கி தேவனுடைய படைப்பை அவரை விட்டுப் புறம்பே இழுத்து ஆதாயப்படுத்தும்படி சாத்தான் தன்னால் இயன்ற யாவற்றையும் செய்திருந்தான் (ஆதி.3); ஆனால் அவன் யோபுவைத் தேவனிடத்தில் இருந்து புறம்பே எடுத்திருந்ததில்லை.

சாத்தானிடம் தேவன், "என் தாசனாகிய யோபுவின்மேல் கவனம் வைத்தாயோ?'' என்று கேட்டார் (1:8). சாத்தான் யோபுவைக் கவனித்திருந்தான். அவன் பிற்பாடு யோபுவின் நண்பர்கள் கேட்டதுபோல், யோபுவின் நன்மைத்தனத்தைக் குறித்துக் கேள்வி எழுப்பவில்லை. அதற்குப் பதிலாக சாத்தான், விஷயத்தின் மையப்பகுதிக்கு நேரடியாகச் சென்றான். அவன் யோபுவின் நோக்கத்தைக் குறித்துக் கேள்வி எழுப்பினான். அவன், தேவன் யோபுவை ஆசீர்வதித்திருந்ததுபோல் எவரொருவரையும் ஆசீர்வதித்திருந்தால், ஆசீர்வதிக்கப்பட்ட அந்த நபர் யாராயிருப்பினும் தேவனுக்கு உண்மையுள்ளவராய் இருப்பார் என்று நம்பினான். அவன், யோபு தேவனை சேவிப்பதில் சுயநலமான நோக்கம் கொண்டிருந்தார் என்று குற்றம் சாட்டினான்:

> யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்? நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர். அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று. ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவையெல்லாம் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் (1:9-11).

யோபு தேவனைப் பற்றிய எதைக்குறித்தும் கவலைப்படவில்லை, ஆனால் தேவன் தமக்குக் கொடுத்தவற்றை விரும்பியதாலேயே அவர் நல்லவராய் இருந்தார் என்று சாத்தான் மறைமுகமாக உணர்த்தினான். தேவன் யோபுவை ஆசீர்வதிப்பதை நிறுத்திக் கொள்வாரென்றால், யோபு தேவனை அன்புகூருவதை நிறுத்திக் கொள்வார் என்று அவன் கருத்துத் தெரிவித்தான்.

சாத்தானின் உரிமை கோருதல்களை அவன் பரீட்சித்துப் பார்ப்பதற்குத் தேவன் அனுமதித்தார். "இதோ, அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது. அவன் மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே" (1:12).

இவ்விடத்தில், சாத்தானைப் பற்றியும் சோதனையைப் பற்றியும் ஆழ்ந்த அர்த்தமுள்ள சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். முதலாவது, யோபுவைப் போல ஒரு நல்ல மனிதர் சாத்தானிடமிருந்து தப்பிக்கவில்லை என்றால் நாமும் தப்பிப்பதில்லை. இரண்டாவது, தேவன் யோபுவைச் சாத்தானுடைய வல்லமையினால் (குறிப்பிட்ட அளவு வரைக்கும்) சோதிக்கப்பட அனுமதித்தார் என்றால் மற்றும் பேதுரு சாத்தானுடைய

சுளகினூடே தூற்றப்படும்படி அனுமதித்தார் (லூக். 22:31, 32) என்றால், நாமும்கூட அவனது (சாத்தானின்) சோதனைகளுக்குக் கீழாவதை எதிர்பார்க்க முடியும். மூன்றாவது, சாத்தானுடைய வல்லமைக்குத் தேவன் ஒரு எல்லையை அமைத்துள்ளார். அவர் அவனை, யோபுவின் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை எடுத்துப்போட அனுமதித்தார், ஆனால் (இவ்வேளையில்) யோபுவின் உடலைத் துன்புறுத்த அனுமதியாதிருந்தார். யோபுவினால் நிலைநிற்கக் கூடிய திறனுக்கு அப்பால் அவரைச் சோதிப்பதற்குச் சாத்தானைத் தேவன் அனுமதியாதிருந்தார். நாம் யாவரும் சோதிக்கப்படுவோம், ஆனால் "தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரி. 10:13).

சாத்தானுக்குத் தெய்வீக அனுமதி தரப்பட்டது, ஆனால் அவன் தெய்வீக வரையறைக்குள்ளாகவும் வைக்கப்பட்டான். தேவன்தாம் சாத்தானைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரே வல்லமையைப் பெற்றிருந்தார். நாம், "ஏன்? யோபுவைக் கடுமையாகச் சோதிக்கும்படி சாத்தானை அனுமதித்ததில் என்ன நன்மை இருந்தது?" என்று கேட்கலாம். இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தல் என்பதே இந்தப் புத்தகம் முழுவதிலும் உள்ள நோக்கமாகும். இந்தப் பாடத்திற்குள் நாம் தொடர்ந்து செல்லும்போது பதில்கள் விரியும். தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார். அவர் தாம் செய்கிறது இன்னதென்று அறிகின்றார். அவரது செயல் நியாயப்படுத்தக் கூடியவைகளாய் இருக்கின்றன, ஏனென்றால் யோபுவும் அவரது உடைமைகள் யாவும் தேவனுடையவைகளாய் இருந்தன (சங். 24:1; 50:10-12; யாத். 19:5; ஆகாய் 2:8; எசே. 18:4). இதை யோபு உணர்ந்து அறிந்திருந்தார். அவர், "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன். நிர்வாணியாய் அவ்விடத்திற்குத் திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்று கூறினார் (1:21).

யோபுவினிடத்தில் இருந்து சாத்தான் எடுத்துக் கொண்ட ஆசீர்வாதங்களைக் கவனியுங்கள்: அவரது ஏர்மாடுகள், கழுதைகள், அவரது ஆடுகள், அவரது ஒட்டகங்கள், அவரது வேலைக்காரர்களில் ஏறக்குறைய யாவரும், மற்றும் அவரது பிள்ளைகள் (1:13-22). அதிகாரம் 1ல் பட்டியல் இடப்பட்டிருந்தவற்றில் இருந்து இரண்டு ஆசீர்வாதங்கள் அவரிடத்தில் இருந்து எடுக்கப்பட முடியாதவைகளாக இருந்தன. சாத்தான் யோபுவின் நீதியான தன்மையையோ அல்லது அவருக்குத் தேவனிடத்தில் இருந்து கிடைத்திருந்த அங்கீகாரத்தையோ எடுக்க முடியாதிருந்தான். அவைகளே யோபுவிடமிருந்து சாத்தான் (பறிப்பதற்கு) மிகவும் விரும்பிய ஆசீர்வாதங்களாக இருந்தன. நமது குடும்பங்கள் எவ்வளவு நல்லவைகளாக உள்ளன என்பது பற்றியோ, நமது உலகப்பொருள் எவ்வளவு பெரிதாக உள்ளது என்பது பற்றியோ அல்லது நாம் எவ்வளவு நண்பர்களைக் கொண்டிருக்கின்றோம் என்பது பற்றியோ சாத்தான் அக்கறை

*கொள்வதில்லை. நாம் தேவனை அன்புகூருகின்றோம் மற்றும் தேவன் நம்மீது அன்புகூருகின்றார் என்பதைத்தான் அவன் உண்மையிலேயே வெறுக்கின்றான்.*

*யோபுவின் உலகப்பிரகாரமான செல்வத்தை எடுத்துப்போடுவதினால், அவர் தேவன் மீது கொண்ட அன்பைப் பலவீனப்படுத்தலாம் என்று சாத்தான் நினைத்தான். அவன், துன்பநிகழ்வைக் கூறுவதற்கு ஒவ்வொரு நிகழ்விலும் ஒரே ஒரு வேலைக்காரன் தப்பியிருந்தது தவிர, அவரது வேலக்காரர்களுடன் அவரது ஏர்மாடுகள், கழுதைகள், ஆடுகள் மற்றும் ஒட்டகங்கள் ஆகியவற்றை அழித்தான். பின்பு சாத்தான் யோபுவின் குடும்பத்தை அடித்தான்.*

*இரண்டாவது பெரிய சோதனை, முதலாவதற்குப் பின்பு உடனடியாக வந்தது (2:1-10). தேவனும் சாத்தானும் மீண்டும் பேசினர். தேவன் தமக்கு உண்மையாயிருந்த ஊழியக்காரரான, பாவம் செய்திருக்காத அல்லது தேவனைக் குற்றப்படுத்தியிருக்காத யோபுவைப் பற்றிச் சாத்தானிடத்தில் நினைவூட்டினார். யோபு முதலாவது சோதனையில் வெற்றி பெற்றிருந்தார். அவரால் இரண்டாவது சோதனையில் வெற்றிபெற முடிந்ததா?*

*அடுத்ததாகச் சாத்தான் யோபுவின் நல்ல உடல் நலத்தைத் தாக்கினான். யோபுவின் நாட்களில், நல்ல உடல்நலம் என்பது தேவனுடைய அங்கீ காரத்தின் சுட்டிக் காண்பித்தல் என்பதாக உணர்ந்தறியப்பட்டது. நல்ல மனிதரும்கூட, தாம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக நம்பா திருந்தால் உடல்நலனை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பது அவருக்குச் சிரமமாகவே இருக்கும்.*

*சாத்தான் சுலபத்தில் விட்டுக்கொடுத்து விடுவதில்லை. அவன், "ஆனாலும் நீர் உம்முடைய கையை நீட்டி, அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையும் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான்" (2:5). சாத்தான் தனது எல்லைகள் விரிவாக்கப்பட வேண்டும் என்று விரும்பினான். தேவன், "இதோ, அவன் உன் கையிலிருக்கிறான்: ஆகிலும் அவன் பிராணனை மாத்திரம் தப்பவிடு" என்றார் (2:6).*

*யோபுவின் துன்பம் அதிகமாயிற்று. சாத்தான், அவரது உச்சந்தலை தொடங்கி உள்ளங்கால் வரை கொடிய பருக்களால் வாதித்தான். அவர் ஒரு ஓட்டை எடுத்துத் தம்மைச் சுரண்டிக்கொண்டு சாம்பலில் உட்கார்ந்தார். அவரது மனைவி அவருக்கு எதிராகத் திரும்பினாள். அவர் அந்த நிலையில் வாழ்வதற்கு பதிலாக, தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்படி அவரை இணங்கச் செய்வதற்கு அவள் முயற்சித்தாள். அப்படிப்பட்ட மதியீனமான பேச்சிற்காக யோபு தமது மனைவியைத் திட்டினார் மற்றும், தேவன் தங்களுக்கு எப்போதுமே நன்மையான காலங்களை மாத்திரம் கொடுப்பார் என்றும் அவர் ஒருக்காலும் துன்பத்தை அனுமதிக்கக்கூடாது என்றும் எதிர்ப்பார்ப்பது சுயநலமானதாயிருக்கும் என்று அவர் மறைமுகமாய்க் குறிப்பிட்டார். இனிமையுடன் கசப்பும் வருகிறது என்பதை யோபு அறிந்தார். அவர் அதைப் பேணவில்லை, ஆனால் அவர் அதை ஏற்றுக் கொண்டார்.*

# *யோபுவின் கேள்வி*

## *(2:11-3:26)*

*யோபுவைச் சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக அவரது நண்பர்களில் மூன்றுபேர் வந்தனர் (2:11-13). எலிப்பாஸ், பில்தாத் மற்றும் சோப்பார் ஆகியோர் தூரத்தில் இருந்து யோபுவைக் கண்டபோது, அவரை அவர்கள் அடையாளம் காணக்கூட முடியவில்லை. அவர்கள் அவருடன் துக்கித்து, ஏழுநாட்களாக ஒரு வார்த்தையும் பேசாது அவருடன் உட்கார்ந்திருந்தனர், ஏனெனில் யோபுவின் துக்கம் மகாபெரியதாக இருந்தது என்பதை அவர்கள் காணமுடிந்தது.*

*யோபு, தாம் பிறந்த நாளை சபித்தார் (3:1-10). அவர் உயிர்வாழ்வதில் மகிழ்ச்சி கொண்டிராத அளவுக்கு அவரது துக்கம் மிகவும் பெரியதாக இருந்தது. அப்படிப்பட்ட பரிதபிக்கப்படத்தக்க வகையில் உயிர் வாழ்தலுக்கான காரணத்தை அவரால் காண இயலாதிருந்தது. அவர், தாம் ஏன் பிறக்கும்போதே இறந்திருக்கவில்லை என்று வியப்படைந்தார் (3:11-19). அவர், உயிர்வாழ்ந்து இப்படிப்பட்ட துன்பத்தை அனுபவிப்பதைக் காட்டிலும் பிறப்பிலேயே இறந்திருந்தால் நலமாய் இருந்திருக்கும் என்று நினைத்தார். மரணத்தில் அவர் குறைந்தபட்சம் இளைப்பாறுதலிலாவது இருப்பார். மரணத்தில், “துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது. பெலனற்று விடாய்த்துப்போனவர்கள் அங்கே இளைப்பாறுகிறார்கள். கட்டுண்டிருந்தவர்கள் அங்கே ஏகமாக அமைந்திருக்கிறார்கள். ஒடுக்குகிறவனுடையசத்தம் அங்கே கேட்கப்படுகிறதில்லை” என்று அவர் நம்பினார் (3:17, 18). அந்தக் கணத்தில் யோபுவுக்கு, மரணத்தில் இளைப்பாறுதல் என்பது தமது வாழ்வில் வேதனை, தனிமை மற்றும் துன்பம் ஆகியவற்றில் உபத்திரவப்படுவதைவிட அதிகம் விரும்பத்தக்கதாயிருந்தது. அவர் புதைத்து வைக்கப்பட்ட செல்வத்தைத் தேடுகின்ற ஒரு நபர்போல் மரணத்தை விரும்பித் தேடினார்.*

*அவர் இப்படிப்பட்ட ஒரு பரிதாபமான நிலையை எதிர்கொள்ளும்படிக்கு ஒரு மனிதனைத் தேவன் ஏன் அனுமதிக்க வேண்டும் என்று வியப்படைந்தார். இந்த நிகழ்ச்சியில் நாம் அதிகம் ஈடுபாடு கொள்ளும்போது, நமது சொந்தக் கேள்விகளும் இதில் கூட்டிக்கொள்ளப்படுகின்றன. அவரது பிள்ளைகள் ஏன் சாக வேண்டும்? அவரது வேலைக்காரர்கள் ஏன் சாக வேண்டும்?*

*யோபு தமது குடும்பத்தின்மீது துன்பம் விழக்கூடும் என்று எப்போதுமே அறிந்திருப்பினும், இந்த நிகழ்ச்சிகள் நடக்கும்படிக்குத் தேவன் ஏன் அனுமதித்தார் என்பதை அவரால் புரிந்து கொள்ள இயலவில்லை. “நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது. நான் அஞ்சினது எனக்கு வந்தது. எனக்கு சுகமுமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைதலுமில்லை. எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது” (3:25, 26). அவர் தமது காவலை ஒருக்காலும் விட்டுவிட்டிருந்ததில்லை, தேவனை ஆராதிப்பதை ஒருக்காலும் நிறுத்தியிருந்ததில்லை, தேவனுக்கான தமது ஒப்புக்கொடுத்தலில் ஒருக்காலும் குறைவுபட்டிருந்ததில்லை. அவ்வாறு செய்தால், இப்போது நடந்துள்ள*

*தைப்போல் ஏதாவது நடக்கும் என்று அவர் பயந்திருந்தார். ஆயினும் அது எப்படியோ நடந்தது. ஏன்?*

*இதேபோன்ற சூழ்நிலைகள் நம்மை எதிர்கொண்டு, "ஏன்?" என்று கேட்கும்படி நம்மைத் தூண்டுகின்றன. பதில்கள் கண்டறியப்படுவதற்குக் கடினமானவைகளாய் இருக்கின்றன. வாழ்க்கையை நாம் தேவனுடைய சாதகநிலைக் கருத்தில் இருந்து காண்பதில்லை. அவரது வழிகள் நம்முடைய வழிகளாய் இருப்பதில்லை. காலப்போக்கில், யோபு தேவனை மாறுபட்ட ஒரு வெளிச்சத்தில் காணவந்தார். அவர் தமது துன்புறுதலை அதிகம் தயாராக ஏற்றுக்கொள்ள முடிந்தது.*

## *முடிவுரை*

*தேவன் நம்மை இந்த பூமியில் என்றென்றும் வாழ்வதற்காகப் படைக்கவில்லை. அவர் நமக்காகப் பரலோகத்தில் மேன்மையான இடம் ஒன்றைத் திட்டமிட்டு அமைத்துள்ளார். இங்குள்ள வாழ்வு என்பது, அங்குள்ள வாழ்விற்கு நம்மைத் தயார் செய்வதற்கான ஒரு சோதனைக்களமாகவே இருக்கிறது.*

> *என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர் களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது (யாக். 1:2-4).*